This book is protected by copyright act. Please do not share this download with others.

இந்தப் புத்தகம் உரிமை பதிவு செய்யப்பட்டது. இதனை மற்றவருக்கு இணையம் மூலம் அனுப்புதல் கூடாது.

# அனிதா–இளம் மனைவி

www.writersujatha.com

## ஆரம்பிக்கு முன்

அந்தப் பெண்ணுக்கு வயது பதினெட்டு இருக்கலாம். அந்த வயதுக்கு ஏற்பட்ட தனி வளர்ச்சி. அவள் கண்களில் பயம் இருந்தது. சற்று ஆர்வமும் இருந்தது. பயமும் ஆர்வமும் எதனால்? அந்த இளைஞன் அவளை அழைத்துச் செல்கிறான். தனியான பாதை. தூரத்தில் மிலிட்டரி ரேடியோ நிலையத்தின் உயரமான ஏரியல் கம்பங்கள். நீல வானம். பாறைப் பிரதேசம். சரிவுகள் காட்டு மலர்கள். மஞ்சள் பூரிப்பு. அவன் அவளை அழைத்துச் செல்வதன் காரணம் அவளுக்குத் தெரியும். இருவரும் காரணம் தெரியாதவர்கள் போல இயல்பாக அந்தத் தனி இடத்தை நாடுகிறார்கள். இருவரும் இளம் வயதினர். சிறிது நெருக்கமாகப் பழகினார்கள். பழக்கத்தின் நெருக்கமும் அவர்கள் அந்தரங்கமாக ஒருவரை ஒருவர் இதுவரை அறிந்தகொண்டதன் பற்றாக்குறையும் இன்னும் கொஞ்சம் இன்னும் கொஞ்சம் என்று எல்லைக் கோடுகளைத் தள்ளித் தள்ளி அமைத்துக் கொண்டு இன்று தனியாக வந்திருக்கிறார்கள். கொஞ்சம் கொஞ்சமாகக் கட்டுப்பாடுகளை விடுவித்துக்கொண்டு இன்று எவ்வளவு தூரம் போகிறது என்று பார்ப்பதற்கு முன்–

அவன் பெயர் ஆனந்த். அவள் பெயர் ராதிகா. இடம் டில்லி. நேரம் மாலை. நவம்பர் மாலை–3–30

அவர்கள் நடந்துகொண்டே சென்றார்கள். இடது பக்கம் பாதைச் சரிவு. அதில் புல் தரைகள் திட்டுத் திட்டாக. பூ மரங்கள், ஜாகராண்டா, குல் மோஹர். வர்ண வர்ணப் பூப்புதர்கள். ஓர் அழகான பூஞ்சோலையாவதற்குத் தயாராகிக் கொண்டிருக்கும் இடம். அவன் கண்கள் தேடின. கூட்டமில்லை. அதனால்தான் அங்கு வந்திருக்கிறான். அவர்கள் பேசுவதைக் கேட்கலாம்.

"பார், என்ன அழகான பூ!" அவள்.

"ஓ. எஸ். இட்ஸ் ப்ரெட்டி." அவன்.

"ராதிகா"

"ம்."

"என்னோடு வா."

"எதற்கு?" (எல்லாம் அர்த்தமில்லாத கேள்விகள் அர்த்தமில்லாத பதில்கள். அவனோடுதான் வந்து கொண்டிருக்கிறாள்; எதற்கு என்பதும் தெரியும்)

"எதற்காக? நான் உனக்கு ஒரு ரகசியம் சொல்கிறேன்."

"என்ன ரகசியம்?"